**பாடம் - 6** الدرس السادس

**குளித்தல்** الغسل

சுத்தம் செய்கிறேன் எனும் நிய்யத்துடன் வாய்க் கொப்பளித்து, நாசிக்கு தண்ணீர் செலுத்தி சுத்தம் செய்து உடம்பு முழுவதும் தண்ணீர் ஊற்றி கழுவுவதற்கே குளிப்பது என்று பொருள். ஐந்து காரணங்களால் குளிப்பு கடமையாகின்றது.

1.ஆணுக்கும் சரி பெண்ணுக்கும் சரி தூக்கத்திலோ விழிப்பிலோ இச்சையுடன் இந்திரியம் வெளிப்படுவது. இச்சையின்றி இந்திரியம் வெளியானால் குளிப்பு கடமையாகாது. உதாரணமாக நோய் அல்லது கடும் குளிரின் காரணமாக இந்திரியம் வெளிப்படுவதுபோல. இவ்வாறே ஸ்கலிதம் வெளிப் பட்டதாகக் கனவு கண்டு இந்திரியமோ அல்லது அதற்கான அடையாளமோ தென்படவில்லையானாலும் குளிப்பு கடமையாகாது. ஆயினும் இந்திரியத்தையோ அதற்கான அடையாளத்தையோ கண்டால் குளிப்பு கடமையாகிவிடும்ளூ கனவில் இந்திரியம் வெளியான ஞாபகம் இல்லாவிட்டாலும் சரியே.

2.ஆண் குறியின் முன்பகுதி யோனியின் மலர்ப் பகுதியில் நுழைந்து இந்திரியம் வெளியாகாவிட்டாலும் குளிப்பு கடமையாகிவிடும்.

3.மாதவிடாய், பிரசவ இரத்தம் நின்று விடும்போது

4.மரணமடைதல். இதுவும் ஒரு காரணம் எனும் அடிப்படையில்தான் மய்யித்தைக் குளிப்பாட்டுவது கடமையாகிறது.

5.ஒருவன் புதிதாக இஸ்லாத்தைத் தழுவினால் குளிப்பது அவனுக்குக் கடமையாகும்.

## துடக்குஉடையவருக்குத்தடுக்கப்பட்டவை

துடக்கு உடையவருக்கு சில காரியங்கள் தடுக்கப்பட்டவையாகும். அவை பின் வருமாறு:

1. தொழுவது, 2. தவாஃப் செய்வது, 3. குர்ஆனைத் தொடுவது, அதைச் சுமப்பது, இதேபோன்று தான் சப்தமிட்டோ, சப்தமில்லாமலோ குர்ஆன் ஓதுவதும் மனப்பாடமாகவோ ஏட்டிலிருந்தோ குர்ஆனை ஓதுவதும். (இது விஷயத்தில் கருத்து வேறுபாடுள்ளது.)

4. பள்ளியில் தங்குவதுளூ ஆனால் பள்ளிக்குள் சென்று வருவதில் குற்ற மில்லை. உளுச் செய்வதன் மூலம் தொடக்கிலிருந்து சிறிதளவு சுத்தமாகிவிட்டால் பள்ளியில் தங்குவது கூடும்.